
# இராமலிங்கவிலாசம் அரண்மனை அகழ்வைப்பகம்

# கையேடு



மா. கலைவாணன், எம்.ஏ.,

முதற் பதிப்பு—1989
இரண்டாம் பதிப்பு 2001 — 2000 பிரதிகள்
தொல்லியல் துறை வெளியீடு எண்: 103

© தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

இராமலிங்கவிலாசம் அரண்மனை
அகழ்வைப்பகம்
கையேடு

ஆசிரியர்
மா. கலைவாணன், எம்.ஏ.,
காப்பாட்சியர்

விலை ரூ. 3.00

தமிழ்நாடு அரசு
தொல்லியல் துறை அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

# இராமலிங்கவிலாசம் அரண்மனை
# அகழ்வைப்பகம்
## கையேடு


**சேதுபதி அரசு தோற்றம்**

தென் தமிழ்நாட்டில் காணப்பெறும் புகழ்வாய்ந்த அரண்மனைகளில் ஒன்றாகத் திகழும் இராமலிங்க விலாசம் அரண்மனை சேதுபதி மன்னர்களின் கலைக்கொடையாகும்.

இராமபிரானால் வழிபடப்பட்ட சிவத்தலம் என்று போற்றப்படும் இராமேச்வரத்துக்குப் பயணம் செய்யும் பக்தர்களுக்குப் பழங்காலத்தில் தற்பொழுது உள்ளதைப் போல் அச்சமின்றி பயணம் செய்யும் வசதிகள் கிடையா. இராமேச்வரம் செல்லும் பயணிகள் மண்டபம் வரை மாட்டு வண்டி அல்லது நடை பயணமாகச் சென்று, அங்கிருந்து இராமேச்வரத்தைப் படகின் மூலம் சென்றடைவார்கள். அவ்வாறு மேற்கொள்ளும் பயணத்தின்போது ஏற்படும் வழிப்பறி போன்ற இடையூறுகளை வழிப்பறிக்கு ஆளான பக்தர்கள் மதுரை நாயக்கர்களிடம் சென்று முறையிடுவது வாடிக்கையாக நடைபெற்று வந்தது. இக்குறையை நீக்கும் பொருட்டு மறவர் நாட்டின் வீரராகத் திகழ்ந்த சடைக்கத் தேவர் என்ற உடையார் சேதுபதியை இராமேச்வரம் பகுதிக்கு மதுரையை ஆட்சி செய்த முத்துக்கிருட்டிணப்ப நாயக்கர் என்பவர் சிற்றரசராக கி.பி. 605-இல் நியமனம் செய்து சேதுவையும் (இராமேச்வரம்) இராமேச்வரம் செல்லும் பயணிகளையும் காக்கும் பொறுப்பை ஒப்படைத்தார். அதுமுதல் ஏறத்தாழ 100 ஆண்டுகள் சேதுபதிகள் போகலூர் என்ற ஊரைத் தலைநகரமாகக் கொண்டு சேது நாட்டை ஆட்சி செய்து வந்தனர்.

## இராமலிங்க விலாசம்

கி. பி. 1700 வாக்கில் சேதுபதிகளிலேயே திறமை மிக்கவரும் நீண்ட காலம் ஆட்சி செய்தவருமான கிழவன் சேதுபதி தனது தலைநகரைப் போகலூரிலிருந்து இராமநாதபுரத்திற்கு மாற்றி இப்பெரும் மாளிகையைக் கட்டினார். அதில் தலையாய இடமான அரசவை நடக்கும் இடத்திற்கு, தானும் தனது முன்னோரும் வழிபட்டுவரும், இராமேச்வரம் உறையும் இறைவனது பெயரைக் குறிக்கும் வகையில் **"இராமலிங்க விலாசம்"** எனப் பெயரிட்டு அழைத்தார். இவ்வரண்மனையின் தலைவாயிலாகத் தற்பொழுது காட்சி அளிக்கும் நுழைவாயில் இராஜா பாஸ்கர சேதுபதி (1873-1903) அவர்கள் காலத்தில் கட்டப்பட்டதாகும்.



இறைவன் மன்னனுக்கு செங்கோல் வழங்குதல்

**ஓவியங்கள் - வரலாற்று நிகழ்ச்சிகள்**

கிழவன் சேதுபதிக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த அவரது மைந்தர் விசய ரகுநாத சேதுபதி இவ்வரண்மனையைக் காண்போர் வியக்கும் வண்ணம் அழகிய ஓவியங்களைத் தீட்டி அழகுக்கு அழகு சேர்த்தார். இவ்வழகிய சுவர் ஓவியங்களே இவ்வரண்மனையின் சிறப்பை உயர்த்துவதாகும்.

இவ்வரண்மனை ஓவியங்களை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். முகமண்டபப் பகுதியிலுள்ள சுவர் ஓவியங்கள் முதலாவதாகக் குறிப்பிடத்தக்கவை. அவ்வோவியங்கள் சேதுபதியின் வாழ்க்கையில் நடந்த மராத்தியப் போர், மைசூர் மூக்கறுப்புப் போர், ஆங்கிலேயர் வியாபார நிமித்தமாகச் சேதுபதியைக் காணுதல் மற்றும் கிறித்துவ பாதிரியார் மாண்டிஸ் அவர்களின் வருகை ஆகிய நிகழ்ச்சிகளை விளக்குகின்றன.

இராமலிங்கவிலாசம் சுவர் ஓவியங்களில் உள்ள போர்க் காட்சிகள் மூலம் 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய ஆயுதங்களைக்கொண்டு எப்படி போர் செய்தனர் என்பதை அறிய முடிகிறது. பீரங்கிகள், துப்பாக்கிகள் போன்றவைகள் பயன் படுத்தப்பட்ட விதத்தைக் கண்டுணர முடிகிறது. அவ்வாறு ஓவியத்தில் காட்டப்பட்டுள்ளதைப் போலவே நமது அகழ்வைப்பகத்திற்கு ஒரு பீரங்கி சேகரிக்கப்பட்டு அவ்வோவியத்தின் அருகிலேயே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது மிகவும் சிறப்பான ஒன்றாகும். இங்கு ஓவியத்தையும், உண்மையையும் நம்மால் ஒப்பு நோக்க முடியும்.

இவ்வோவியத்திற்கு அருகிலேயே தமிழக நெறியில் நடைபெறும் போர்க் காட்சி ஒன்றும் தீட்டப்பட்டுள்ளது. வீரர்கள் வேல், கத்தி, கேடயம் போன்ற ஆயுதங்களையே பயன்படுத்துகின்றனர். இவ்விரு ஓவியங்களும் அருகருகே

தீட்டப்பெற்றிருப்பதால், நாம் ஐரோப்பிய, தமிழகப் போர்க் கருவிகளை ஒப்பிட்டு அறியவும், அன்று இரு முறையிலும் போர்கள் நடந்தன என்பதையறியவும் முடிகின்றது.

**சமயச் சார்பான ஓவியங்கள்**

அதனையடுத்து சைவ சமயக் காட்சிகள் உள்ளன. இச்சுவருக்கு நேர் எதிர்புறம் வைணவத் தெய்வங்களின் திருவுருவங்களும், திருமாலின் அவதாரங்களும் வரையப் பட்டுள்ளன. சைவத்தையும் வைணவத்தையும் சேதுபதிகள் சமமாகப் பேணினர் என்பதற்கு இச்சுவர் ஓவியங்கள் நல்ல சான்றாகும்.

**பாகவத இராமாயணக் காட்சிகள்**

முகமண்டபத்தினை அடுத்துள்ள சிறிய மண்டபப் பகுதியில் கண்ணனுடைய லீலைகளும் அவனது குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளும் வரையப்பட்டுள்ளன. உள்மண்ட பத்தின் சுவர்களில் இராமாயணக் காட்சிகள் காணப்படு கின்றன.

உள்மண்டபத்தின் விதானத்தில் மீண்டும் சேதுபதி களின் வாழ்க்கை நடைமுறைகள் அழகுறத் தீட்டப் பட்டுள்ளன.

இக்காட்சிகளில் உள்ள இராமர், வில்வித்தை, யானை ஏற்றம், குதிரை ஏற்றம் முதலியவற்றைப் பயிலும் காட்சி சிறுவர்களும் கண்டு ரசிக்கும் வண்ணம் அழகாகத் தீட்டப் பட்டுள்ளது.

**சேதுபதியின் குடும்ப வாழ்க்கை**

இவ்வரண்மனையின் முதல் மாடியில் சேதுபதி மன்னர் அரசியுடனும் அந்தப்புரப் பெண்களுடனும் தமது ஓய்வுப் பொழுதை எப்படிக் கழித்தார் என்பதை விளக்கும் சித்திரங்கள் எழுதப்பட்டுள்ளன.



அரசி கண்ணாடிப் பார்த்து அலங்கரித்தல்

இவ்வோவியத்தில் பெண்களின் உருவங்களினாலேயே ஓர் யானையைப் போலவும் அதன்மீது அரசர் அமர்ந்து கரும்பு வில்லால் மலர்க்கணையினை அரசியை நோக்கித் தொடுப்பது போலவும், அதன் எதிரே பெண்களின் உருவங்களினாலேயே அமைந்த குதிரை உருவம் வரையப் பட்டு அதன் மீது அரசி அமர்ந்து அரசர் மீது மலர்க் கணை தொடுப்பது போலவும் உள்ள ஓவியம் எத்துணை முறை பார்த்தாலும் மீண்டும் பார்க்கத் தூண்டும் வண்ணம் அழகாக வரையப்பட்டுள்ளது.

அரசர் மது அருந்துவது போலவும், அவரைச் சுற்றி பல்வேறு வடிவங்களில் மதுப்புட்டிகளும், மது அருந்தும் கோப்பைகளும் தீட்டப்பட்டுள்ளன. இவை அந்நாளில் எத்தனை வகையான மதுப்புட்டிகளும் கோப்பைகளும் இருந்தன என்பதை நமக்குப் புலப்படுத்துகின்றன.

இவ்வோவியங்களில் உள்ள கழுத்தணிகள், காதணிகள், பெண்களின் கொண்டையை அலங்கரிக்கும் அணிமணிகள், எத்தனை, எத்தனை வகையான அணிகலன்கள் என பகுத்து அறிய முடியாத அளவில் உள்ளன. அன்றைய இசைக்கருவிகளும், இசைக்கும் முறைகளும்கூட நம்மால் இவ்வோவியங்களிலிருந்து அறிய முடிகிறது.

**மன்னர் மகளிருடன் நீராடல்**

மன்னர் அந்தப்புர பெண்களுடன் நீரில் விளையாடும் காட்சி உயிரோவியமாக இங்கு வரையப்பட்டுள்ளது,

இக்காட்சி,

> "தேரிடைக் கொண்ட அல்குல்தெங்கிடை
> கொண்டகொங்கை
> ஆரிடை சென்றும் கொள்ள ஒண்கிலாஅழகு
> கொண்டாள்
> வாரிடைதனம் மீதுஆட மூழ்கினாள் வதனம்
> மைதீர்
> நீரிடை தோன்றும் திங்கள் நிழல் எனப்
> பொலிந்ததன்றே"

என்ற கம்பனது வரிகளை நமக்கு நினைவூட்டுவதாக அமைந்துள்ளது.

ஒவ்வொரு ஓவியத்தின் கீழும் தமிழிலோ, தெலுங்கிலோ அவ்வோவியத்திற்குரிய விளக்கம், பேச்சு மொழியிலேயே எழுதப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வோவியங்கள் அனைத்தும் மலர்களிலிருந்தும் தழைகளிலிருந்தும் எடுக்கப்பட்ட சாறுகளினாலும், கரியினாலும், மஞ்சளாலும் வரையப்பட்டவைகளாகும்.

***ஆடைச் சிறப்பு***

இவ்வோவியங்களில் வரையப்பட்டுள்ள ஆடைகளின் சிறப்பு கண்டு ஆராயத் தக்கது. மன்னர் இசுலாமியப்

பாணியிலும், தமிழகப் பாணியிலுமாக உடைகள் அணிந் திருப்பது, இசுலாமியத்தின் தாக்கத்தை நமக்கு எடுத்து இயம்புகின்றது. குறிப்பாக இவ்வோவியங்களில் உள்ள சேலைகள் குறிப்பிடத்தக்கவை. மூன்று நூற்றாண்டு களுக்குப் பிறகும் இன்றும் துணிகளில் இராமநாதபுரச் சுவர் ஓவியங்களில் காணப்பெறும் வடிவங்களையே (Designs) 'தங்களின் புதிய தயாரிப்பு' எனச் சேலைகளை தயாரித்து வெளியிடுகின்றனர் என்றால் அவ்வோவியங் களின் மாட்சியை எவ்வாறு வருணிப்பது?

அன்றைய இசைக் கருவிகளையும், இசைக்கும் முறை களையும் கூட இவவோவியங்களில் இருந்து நம்மால் அறிய முடியும்.

சுமார் 275 ஆண்டுகளுக்கு முன்பு தீட்டப்பட்ட அவ்வோவியங்கள், இன்று வரையப்பட்டவைபோல் காட்சி தரும் சிறப்பை எண்ணியெண்ணி வியக்கவேண்டியுள்ளது.

### *ஓவியச் சிறப்பு*

வட இந்தியாவில் இமயமலைச் சாரற் பகுதிகளிலும், இராஜஸ்தானம், பஞ்சாப், கொல்லூர், கோட்டா மற்றும் கார்வால், பசாரி ஆகிய இடங்களிலும் உள்ள ஓவியங் களோடு இராமநாதபுரம் ஓவியங்களும் ஒப்பிடக்கூடிய அளவிலுள்ளன. தமிழ்நாட்டில் மற்ற இடங்களில் கிடைக்கும் ஓவியங்கள் சமயத் தொடர்பு உடையவை. ஆனால் இராமநாதபுரம் ஓவியங்கள் சமுதாயச் சூழல் களைச் சித்தரிக்கும் ஓவியங்களாகச் சிறப்புற்றுத் திகழ் கின்றன.

### *ஜாக்சன் துரையை கட்டபொம்மன் சந்தித்தது*

ஆங்கில கலெக்டர் ஜாக்சன் துரை, விடுதலைக்கு வித்திட்ட வீரபாண்டிய கட்டபொம்மனை இவ்வரண்மனை யில்தான் தம்மைப் பேட்டி காண அழைத்தார். பேட்டிக்காக நட்புடன் வந்த பாஞ்சாலச் சிங்கத்தை

வெள்ளையக் குள்ளநரி தந்திரத்தால் பிடிக்க ஆணையிட்ட போது கட்டபொம்மன் வெள்ளையர்களை வெட்டி வீழ்த்தி அடலேறாக வெளியேறிய வீர வரலாற்று நிகழ்ச்சியும் இவ்வரண்மனையில்தான் நிகழ்ந்தது.

### சேதுபதியின் அன்பளிப்பு

முன்னூறு ஆண்டு வரலாற்றை உடைய இவ்வரண்மனை, மறைந்த பெருந்தகை திரு. இராமநாத சேதுபதி அவர்களால் தமிழக அரசுக்கு அன்பளிப்பாகத் தரப்பட்டுத் தற்பொழுது தமிழநாடு அரசு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்படும் வரலாற்றுச் சின்னமாக விளங்குகிறது.

### அகழ்வைப்பகம்

இத்துறை இவ்வரண்மனையிலேயே அகழ்வைப்பகம் ஒன்றையும் அமைத்துச் சிறப்பிற்குச் சிறப்பு சேர்த்துள்ளது.

இங்குள்ள அகழ்வைப்பகத்தில் வரிசையாக சேதுபதிகளின் ஓவியங்களும், அடையாளச் சின்னமும் (Badges) காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. சேதுபதி மன்னர்கள் பயன்படுத்திய போர்க் கருவிகளும், கலைப் பொருட்களும் மற்றும் அவர்கள் வெளியிட்ட செப்பேடுகளும், ஆவணங்களும் காட்சியில் உள்ளன. சேதுபதிகளின் வாழ்க்கையில் நடந்த சிறப்புமிக்க நிகழ்ச்சிகளின் நிழற்படங்களும், பாம்பன் இருப்புப் பாதைப் பாலத் திறப்பு விழாக் காட்சிகளும் காண்போரைக் கவரும் வண்ணம் இக்காட்சிக் கூடத்தில் வைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தை ஆட்சி செய்த பண்டைய அரசர்களின் செப்புக் காசுகளும், பொற்காசுகளும் இங்கு காணத்தக்கவை.

### அகழாய்வுப் பொருட்கள்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, இராமநாதபுரம் மாவட்டம் அழகன் குளத்தில் அகழாய்வு செய்து சுமார் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பே இப்பகுதி

மக்களுக்கும் உரோமானியர்களுக்கும் வியாபாரமும் மற்றும் பண்பாட்டுத் தொடர்புகள் இருந்தன என்பதை வெளிப் படுத்தியுள்ளது. அவ்வகழாய்வில் கிடைத்த கலைப் பொருட்களும் இங்குக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கிடைத்துள்ள கலைப்பொருட்களையும், கற்சிலைகளையும் இவ்வகழ்வைப்பகத்தில் கண்டு மகிழலாம்.

### இசைக்கருவி

பகைவர்மீது வீசினால் அவர்கள் மேல் பட்டவுடன் வீசியவர் கைக்கே திரும்பி வரும் 'வளரி' என்ற அற்புத ஆயுதமும்; ஒரே சமயத்தில், மீட்டும் தன்மையும், அடிக்கும் தன்மையும் (கம்பி இசை, தோற்கருவி இசை) இணைந்த 'ஸ்வரகத் வீணை' என்ற காண்பதற்கரிய இசைக்கருவியும் இங்கு காட்சியில் உள்ளன.

இவைகளுடன் சுடுமண் பொம்மைகளும், பழைய கற்கால, புதிய கற்காலக் கற்கருவிகளும், நுண்கற் கருவி களும், சங்கு வளையல்களும், முதுமக்கள் தாழியும், வீரர்கள் வலிமையைக் காட்ட உதவும் இளவட்டக் கல்லும் இங்கு உள்ளன.

### *சிவகங்கைச் சிம்மாசனம்*

சிவகங்கை மன்னர்கள் அமர்ந்து சீரோடு ஆட்சி செய்த சிம்மாசனமும் காண்போரைக் கவரும் வண்ணம் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. சேதுமன்னர்கள் முடி சூட்டிக்கொள்ளும் பட்டாபிஷேக மேடையும் இங்கு காணத் தக்க ஒன்றாகும்.

### *கிழவன் சேதுபதி (1674 - 1710)*

சேதுபதி மன்னர்களிலேயே மிகவும் சிறப்பிற்குரியவர் கிழவன் சேதுபதியாவார். இவர் காலத்தில்தான் தற்பொழுது இராமநாதபுரந்தில் ஓங்கி உயர்ந்து நிற்கும்

இவ்வரண்மனை கட்டப்பட்டது. மதுரை நாயக்கர்களின் கீழ் சிற்றரசாக இருந்த மறவர் நாடு சுயாட்சி பெற்றது இவரது ஆட்சிக்காலத்திலேயாகும்.

மதுரையில் ஆட்சி செய்த சொக்கநாத நாயக்கருக்கு எதிராக அவரது படைத்தளபதி ருஸ்தம்கான் என்பவன் புரட்சி செய்து மதுரையில் இருந்து திருச்சிக்குத் தலை நகரை மாற்றித் தானே அரசன் என பிரகடனப்படுத்தி னான். அவனை கி.பி. 1680-ஆம் ஆண்டு கிழவன் சேதுபதி முறியடித்து மதுரை அரசைச் சொக்கநாத நாயக்கருக்கு மீட்டுத் தந்தார். நாயக்கர் மனம் மகிழ்ந்து கிழவன் சேதுபதிக்கு ராஜகேசரி என்ற பட்டத்தை அளித்தார்.

கி.பி. 1686-இல் தஞ்சை மராட்டிய தளபதி செங்கமல தாசனையும், மதுரை முத்து வீரப்ப நாயக்கன் படைகளையும் இருமுறை கிழவன் சேதுபதி வெற்றி கண்டார். ஒரே வாரத்தில் 30,000 முதல் 40,000 வீரர்களைப் போருக்குத் தயார் செய்யும் வலிமையுடன் கிழவன் சேதுபதி திகழ்ந்தார்.

கி.பி. 1709-இல் மறவர் நாட்டை பஞ்சமும், புயலும் தாக்கிய சூழ்நிலைகளைத் தமக்குச் சாதகமாக்கி மராட்டியமும் மதுரை நாயக்கர்களும் ஒன்றாகச் சேர்ந்து படையெடுத்தனர். அத்தனையும் கிழவன் சேதுபதி முறியடித்தார். இப்படி கிழவன் சேதுபதி தனது வாழ்நாளில் தான் பங்கு பெற்ற அனைத்துப் போர்களிலும் வெற்றி வீரராகத் திகழ்ந்தார்.

புதுக்கோட்டையைச் சேர்ந்த இரகுநாதன் என்பவர் புரட்சி செய்து புதுக்கோட்டைப் பகுதியை மறவர் நாட்டில் இருந்து பிரித்துத் தஞ்சையுடன் இணைக்க முயற்சி செய்தார். சேதுபதி ரகுநாதனின் தங்கையை

மணந்து அவரைச் சமாதானப்படுத்தி அவ்ருக்கு ''ரகுநாத தெண்டமான்'' எனப் பட்டமளித்துப் புதுக்கோட்டை அரசைத் தோற்றுவித்தார்.

கி.பி. 1710-இல் கிழவன் சேதுபதி இறந்தபொழுது அவருக்கு 47 மனைவிகள் இருந்ததாகவும், அவர்கள் அனைவரும் உடன்கட்டை ஏறி இறந்ததாகவும் சொல்லப் படுகிறது.

கிழவன் சேதுபதி திருப்புல்லாணி, முதுகுளத்தூர், திருச்சுழி, இராமேச்வரம் ஆகிய கோயில்களுக்குத் திருப் பணிகள் செய்து நிவந்தங்கள் ஏற்படுத்தினார். புது மடத்தில் இராமேச்வரம் செல்லும் பயணிகளுக்காக ஒரு சத்திரம் கட்டினார்.

அவர் சிறந்த நிர்வாகியாகவும், அனைத்து மதத் தினரும் போற்றும் அரசராகவும் திகழ்ந்தார். வள்ளல் சீதக்காதியின் உற்ற நண்பராகவும் விளங்கினார்.

**சேதுபதிகளும் இராமேச்வரமும்**

சேதுபதிகளின் வரலாறும், இராமேச்வரத்தின் வரலாறும் ஒன்றை ஒன்று பிரிக்க முடியாதபடி இணைந் தவைகளாகும்.

சேதுபதிகளை இராமரே தான் கட்டிய சேது பந்தனம் என்ற சேதுக்கரைக்கு காவலர்களாக நியமனம் செய்தார் என்ற செவிவழிச் செய்தி நிலவிவருகிறது. தற்பொழுதுள்ள கருவறையை உடையான் சேதுபதி அவர்கள் கட்டினார். கி.பி. 1607-இல் அவராலேயே வாகன மண்டபத்தில் இருந்து கல்யாண சுந்தரேசுவரர் சன்னதி வரை உள்ள இரண்டாவது பிரகாரமும் கட்டப் பட்டது. கி.பி. 1647-இல் இரகுநாத சேதுபதி அவர்கள் இராமேச்வரம் கோயிலுக்குக் கல் தரை பாவும் பணியைச் செய்து முடித்தார். கோயிலின் கிழக்குக் கோபுரமும்,

அனுமன் கோயிலும் தளவாய் சேதுபதியால் கட்டப் பட்டன. விசய இரகுநாத சேதுபதியால் (கி.பி. 1710-1720) அர்த்தமண்டபமும், மேற்குக் கோபுரமும் கட்டப் பட்டன.

கி.பி. 1730.ல் இரகுநாத சேதுபதியால் உலகப் புகழ் பெற்ற 690 அடி நீளமும் 345 அடி அகலமும் கொண்ட இராமேச்வரம் கோயிலின் மூன்றாவது பிரகாரம் தொடங்கப் பெற்றுள்ளது. கி.பி. 1769-இல் முத்துராம லிங்க சேதுபதியால் இப்பெரும் பணி நிறைவு செய்யப் பட்டது.

அதன் பிறகு ஆட்சிக்கு வந்த சேதுபதிகள் ஆர்க்காட்டு நவாப்புகளுடனும், ஆங்கிலேயர்களுடனும் தங்களுடைய வாழ்க்கைக்காகப் போராட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால் இராமேசுவரம் கோயிலின் கட்டுமானப் பணிகளுக்குத் தங்கள் கவனத்தைத் திருப்ப முடியாமல் போய்விட்டது. இருப்பினும் அவர்கள் வெளி யிட்ட பல்வேறு செப்புப் பட்டயங்கள் அவர்கள் இராமேச் வரம் கோயிலுக்குச் செய்த அறக்கொடைகளையும், நிவந்தங்களையும் இன்றும் பறைசாற்றுகின்றன.

## இந்து சமயமும் சேதுபதிகளும்

இந்து சமயத்திற்கும், அதன் வளர்ச்சிக்கும் சேது பதிகள் அளவிட முடியாத அரும்பணிகளைச் செய் துள்ளனர். சேது நாட்டில் ஒவ்வொரு ஊரிலும், ஒரு சிறு கோயிலாவது அவர்களால் கட்டப்பட்டுள்ளது. 1893-இல் சிகாகோ நகரில் நடந்த மதங்கள் பற்றிய ஆய்வு மாநாட்டிற்குச் சுவாமி விவேகானந்தரை அனுப்பி வைத்து இந்து சமயத்தின் பெருமையை உலகம் முழுவதும் பறைசாற்றிய பெருந்தகையாளர் இராசா பாஸ்கர சேதுபதியே ஆவார்.

அதேபோல் தமிழ் வளர்ச்சிக்கும் சேதுபதிகள் சிறந்த பணி செய்துள்ளனர். பல்வேறு புலவர்களையும் ஆதரித்தனர். குறிப்பாக இராசா பாஸ்கர சேதுபதி அவர்கள் தமிழையும், தமிழ் அறிஞர்களையும் பெரிதும் போற்றி வணங்கினார். மதுரையில் தமிழ்ச் சங்கம் நிறுவிய பாண்டித்துரை தேவரின் அருந்தமிழ்ப் பணியும் என்றும் நினைவுகூரத்தக்கதாகும்.

## இராமநாத சேதுபதி

சேதுபதிகளில் இறுதியாக இருந்த இராமநாத சேதுபதி பெரும் கொடையுள்ளம் கொண்ட பெருமகனாவார். இராமநாதபுரத்தின் வளர்ச்சியை மனதில் கொண்டு அங்கு அரசு பொதுமருந்துவமனை நிறுவவும், அரசு கலைக் கல்லூரி நிறுவவும் அரசுக்குத் தன் சொந்த நிலத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இவைகளே அன்றி எண்ணிலடங்கா பொதுப் பணிகளையும் செய்துள்ளார்.

அவர் ஆற்றியுள்ள இறைப் பணிகள் என்றும் நிலைத்து நிற்பவை. அவர் இராமநாதபுரச் சமஸ்தானத்தின் பொறுப்பில் 61 கோயில்களைத் திறப்பட நிர்வாகம் செய்தார்கள். தமிழகத்தின் பல்வேறு கோயில்களுக்கு 20-க்கும் மேற்பட்ட நிவந்தங்களை ஏற்படுத்தினார். 28 தர்ம சத்திரங்களைப் பராமரித்து வந்தார்கள்.

1. மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில், விடந்தகுளம்.
2. சுவாமிநாத சுவாமி கோயில், இராமநாதபுரம்.
3. அன்னதான விநாயகர் கோயில், இராமநாதபுரம்.
4. வனசங்கரி அம்மன் கோயில், இராமநாதபுரம்
5. பால அனுமார் கோயில், இராமநாதபுரம்.
6. சிதம்பர விநாயகர் கோயில், திருஉத்திரகோசமங்கை.

7. வெயில் காத்த விநாயகர் கோயில், உப்பூர்.
8. வீரமாகாளி அம்மன் கோயில், தேரிருவேலி.
9. இராச இராசேசுவரி அம்மன் கோயில், இராமநாதபுரம்.
10. இராமநாத சுவாமி கோயில், இராமநாதபுரம்.
11. இராமலிங்க சுவாமி கோயில், இராமநாதபுரம்.
12. சிவன் கோயில், திருவாடானை.

ஆகிய கோயில்களுக்குத் திருப்பணி செய்த பெருமையும் அப்பெருமகனுக்கு உரியதாகும்.

இச்சிறப்புமிக்க அரண்மனையும் அகழ்வைப்பகமும் பொது மக்கள் பார்வைக்காக ஒவ்வொரு நாளும் காலை ஒன்பது மணி முதல் மாலை ஐந்து மணி வரை திறந்து வைக்கப்பட்டிருக்கும். அரசின் குறிப்பிட்ட விடுமுறை தினங்கள் தவிர மற்ற அனைத்து நாட்களிலும் இவ்வரண்மனையை மக்கள் கண்டுகளிக்கலாம்.